*கவனிக்க.- 11.04.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1755 - 2012 අප්‍රේල් මස 20 වැනි සිකුරාදා - 2012.04.20

*1755 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 426 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 428 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, வைகாசி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, பங்குனி 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு (வைத்தியசாலைக்கு வெளியே) பிரிவில் வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| கம்பஹா | ஜா-எல | அளுத்குறு கோரளை தெற்கு பிரிவில் ராகம பகுதியில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |

4-507

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, வைகாசி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, பங்குனி 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | மாவனல்லை | கல்பட கினிகொட கோரளை பிரிவில் கிரிகன்தெனிய பகுதியில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கேகாலை |
| கேகாலை | ருவன்வெல்லை | கோரலதுன மற்றும் பாத்தபுலத்கம பிரிவில் கண்ணாத்தோட்ட முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கேகாலை |

4-508

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி – கிளிநொச்சி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, வைகாசி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2011, பங்குனி 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கிளிநொச்சி | பளை (பச்சிலைப்பள்ளி) | முள்ளிப்பற்று பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் பச்சிலைப்பள்ளி பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கிளிநொச்சி |

4-427

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை-2012

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2012, யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2012.05.18 ஆந் திகதி என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04(ii) வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை

இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்பதாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதுபற்றி சரியாக குறிப்பிட்டுள்ள இரண்டு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் மேலே உள்ள தகவல்களை உரிய முறையில் 7(i) அல்லது (ii) தகவல்களை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும், இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் பரீட்சைக் கட்டணம் தனித்தனியாகச் செலுத்தி இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்று தனித்தனியாக ஒட்டுதல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2012.05.18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பத்தரமுல்லை, பெலவத்தை, ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு'' கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன் விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படலாம்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் முகவரியொன்றும் குறிப்பிடப்பட்ட உங்களது வேண்டுகோள் கடிதத்தை இலங்கை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக விருக்கும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) பூரணமான முகவரி ;
(iv) விண்ணப்பப் படிவம் தபாலில் இடப்பட்ட தபாற்கந்தோர், பதிவு செய்த இலக்கம் மற்றும் திகதி.

5. **ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின்போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிடையே ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரி ஒருவரின் பரீட்சார்த்தித் தன்மையை நிராகரித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் :-

(அ) முதலாவது தடவைக்கு இரண்டு வினைத்திறன்காண்தடைப் பரீட்சைகளுக்கும் கட்டணம் அறவிடப்படமாட்டாது ;
(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்காகவும் ரூபா 400.00 வீதம் அறவிடப்படும் ;
(இ) ஒரு விடயத்துக்கு ரூபா 150.00 அறவிடப்படும்.

உரித்துடைய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்று போகாத வகையில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும். வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணத்தைத் தனித்தனியே செலுத்திய இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களில் ஒட்டுதல் வேண்டும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள "பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்'' இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று வழங்கப்பட்டுள்ள தங்களது திணைக்கள/அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்

களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதக்கூடாது.

9. இந்த ஒழுங்குவிதிகளில் அடங்கியில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனுமொரு வித்தியாசம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

11. முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய விடயப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் விடயப் பரப்பு

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் விடயங்களைக்கொண்டு காணப்படும் :-

(i) திட்டமிடல் எண்ணக்கருக்கள், விதிநுட்பங்கள், மற்றும் திட்டமிடல் நிறுவனங்கள் (பாட இல. 01) - 100 புள்ளிகள்

(ii) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளி விபரம் (பாட இல. 02) - 100 புள்ளிகள்

(iii) செயற்திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், பின்னூட்டல் (பாட இல. 03) - 100 புள்ளிகள்

(iv) தாபன ஒழுங்குவிதிகள் மற்றும் அரச நடைமுறைப்படுத்தல், பின்னூட்டல் துறையின் நிதித்திட்டம் (பாட இல. 04) - 100 புள்ளிகள்

(v) ஆங்கில மொழி (பாட இல. 05) - 100 புள்ளிகள்

(2) சேவைப்பிரமாணக் குறிப்பின் மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலப்பகுதியினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மேலும், அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே முறையில் அல்லது தனித்தனியாக பல முறைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு அனுமதி உண்டு.

(3) ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்கும் காலம் : 03 மணித்தியாலங்கள் ஆகும்.

(4) வினாப்பத்திரத்திலுள்ள அனைத்து வினாக்களுக்கும் கட்டாயமாக விடயளித்தல் வேண்டும்.

(5) சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலே பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

***பரீட்சை ஒழுங்குவிதிகள்.- முதலாவது வினாத்தாள்.-*** திட்டமிடல் எண்ணக்கருக்கள் மற்றும் முன்னுரிமைகள், விதிநுட்பங்கள், திட்டமிடல் நிறுவனங்கள் :

(i) தேசிய குறிக்கோள்கள், முன்னுரிமைகள் மற்றும் அவற்றைச் சாத்தியப்படுத்திக் கொள்வதற்கான கொள்கைச் சட்டகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்

(ii) தேசிய திட்டமிடலுக்கான விதி நுட்பங்கள், திட்டமிடலில் உள்ள பிரதான சிக்கலான இடங்கள், பொது மக்களின் ஒத்துழைப்பு வளங்களைப் பயன்படுத்தல்

(iii) தேசிய திட்டமிடலுக்கான தரவுகளின் தன்மை மற்றும் மூலம், தரவுகள் சேகரித்தல், பொருள் கோடல்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு, துறை சார்ந்த பரிசோதனை மற்றும் ஆய்வு, பொது ஊடக எண்ணக்கரு, பொருளியல் ஆய்வு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு.

***இரண்டாவது வினாத்தாள்.-*** பொருளாதார பகுப்பாய்வு மற்றும் கணக்கிடல் :

(i) உற்பத்தி மற்றும் விநியோகம் பற்றிய நியதிகள்மீது விசேட கவனத்துடன் பொருளியல் மூலதர்மங்கள்

(ii) பணம், வங்கி அமைப்பு, சர்வதேச நிதி அமைப்பு மற்றும் வியாபாரம்

(iii) நிதி, பணம், வியாபாரம் மற்றும் தீர்வை வரிக் கொள்கைப் பகுப்பாய்வு

(iv) இலங்கையில் பொருளாதாரக் கட்டமைப்பு

(v) பொருளாதார மீளாய்வு

(vi) கலைப் பயிற்சி மற்றும் பயிற்றப்படாத மனித சக்தி மற்றும் வெளிநாட்டு உதவி உட்பட்டதாக ஏனைய வளங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தல்

(vii) பொருளாதார விஞ்ஞான மற்றும் சமூக ரீதியான நிகழ்வுகள்

(viii) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலில் பயன்படுத்தப்படும் ஆரம்ப கணக்கிடல் கொள்கைகள் மற்றும் திட்டங்கள்.

(ix) பயன் விளைவுகள்/செலவினப் பகுப்பாய்வு மூலதர்மங்கள்

***மூன்றாவது வினாத்தாள்.-*** கருத்திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல் :

(i) கருத்திட்டங்களைத் திட்டமிடல், இனங்காணல், பொருள் கோடல் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்கல், கொள்கைகள், சித்தாந்தம், இடத்தைத் தெரிவு செய்தல் தொழில்நுட்பம், செலவினம் மற்றும் பயன் விளைவுகள், மதிப்பீடு செய்தல் தொழில்நுட்ப நிதி மற்றும் பொருளாதார பகுப்பாய்வு.

(ii) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு முறையாகவும் உரிய காலத்திலும் நடைமுறைப்படுத்தல், விரிவான செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் அட்டவணை தயாரித்தல், பின்விபரம் மற்றும் முன்னேற்ற நிர்வாகத்தை ஒன்றிணைத்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள்.

(iii) கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், கருத்திட்டங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் பயன் விளைவுகளை மதிப்பீடு செய்தல், செலவினங்களுடன் தொடர்புடையதாக பயன் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

***நான்காவது வினாத்தாள்.*** - தாபன ஒழுங்குவிதிகள் மற்றும் அரச துறையின் நிதி முறைமைகள் :

(i) அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள், தொகுதி I (X ஆம் அத்தியாயம் தவிர்ந்ததாக)

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் I, II, III, IV, V, VI, VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXIII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLXVII, XLVIII.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கடமை ஒழுங்கு விதிகள், தொகுதி I முதல் VI வரையிலான அத்தியாயங்கள்

(iii) இலங்கையின் நிதி நிருவாகம்:- அரச முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரச நிதி சம்பந்தமான பாராளுமன்ற நிருவாகம், திரண்ட நிதியம் மற்றும் அதன் தொழிற்பாடு, ஒதுக்கீட்டின் குறிக்கோள்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைமைகள், அரச வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள், வொறண்ட் மற்றும் முற்பண அதிகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரது அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள், அரச செலவினக் குழு, அரச தொழில் முயற்சிகள் குழு.

(iv) கணக்கு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கு உத்தியோகத்தர்கள் மற்றும் அரச வருமானங்கள் பற்றிய கணக்கு உத்தியோகத்தர்களையே நியமித்தல், அவர்களது பொறுப்புக்கள் மற்றும் கடமைகள்.

(v) அரச வருமானங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், அமைப்புக்களின் குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை இனங்காணல், வருடாந்த வருமானம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி தீர்மானங்களை மேற்கொள்ளல், அனுமதிக்கப்பட்ட செலவின மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல், அரச துறையின் பணியாட்டொகுதி முகாமைத்துவம், குறைநிரப்பு மதிப்பீடுகள்.

(vi) அரசாங்க வழங்கல் ஒழுங்குவிதிகள்.- பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்ளல், வழங்கல் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தன்மை, நியமனம், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள். விலைமதிப்பீட்டு ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு உதவிகள் மீது நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் முகாமைத்துவம்.

***ஐந்தாவது வினாத்தாள்.*** - ஆங்கில மொழி.- திட்டமிடல், அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய விடயங்களுடன் தொடர்புடையதான விண்ணப்பதாரர்களின் கல்வி மற்றும் தொழில்சார் ஆங்கில மொழித் திறன் பற்றி அளவிடுவதற்காக ஆங்கில மொழி பற்றிய எழுத்துமூல பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடப்பரப்பு

இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(i) அபிவிருத்தி திட்டமிடல் தொழில்நுட்ப முறைகள் (பாட எண்-06) - 100 புள்ளிகள்

(ii) அடிப்படைப் பெரும்பாக பொருளியல் (பாட எண்-07) - 100 புள்ளிகள்

(iii) நடைமுறை சர்வதேச பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றின்மூலம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் (பாட எண்-08) - 100 புள்ளிகள்

2. அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே முறையில் அல்லது தனித் தனியாக பல தடவைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அனுமதி உண்டு.

3. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான (காலம் : 03 மணித்தியாலங்கள்)

4. வினாத்தாளில் உள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

5. சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலிருந்தும் 40% புள்ளிகளை அல்லது அதிலும் கூடுதலாக விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**பரீட்சை ஒழுங்குவிதிகள்**

(i) அபிவிருத்தி திட்டமிடல் நுட்பங்கள்

(அ) 'ஸ்வொட்' பகுப்பாய்வு (SWOT)
(ஆ) பிணக்கு மரம்
(இ) தர்க்க சட்டக பகுப்பாய்வு
(ஈ) செலவினம் - நன்மை பகுப்பாய்வு
(உ) செலுத்தல் முறைமை
(ஊ) தேறிய தற்போதைய பெறுமதி
(எ) உள்ளக நன்மை விகிதம்
(ஏ) நிழல் விலையினை பயன்படுத்தல்

(ii) அடிப்படைப் பெரும்பாக பொருளாதார விஞ்ஞானம்

(அ) தேறிய கணக்குகள்
(ஆ) பொருளாதார விருத்தி வேகம்
(இ) ஏற்றத்தாழ்வற்ற தேறிய வருமானம்
(ஈ) பெருக்க எதிர் விளைவுகள்
(உ) பண வீக்கம்
(ஊ) வட்டி வீதம்
(எ) அரச நிதிக் கொள்கைகள் பற்றிய அறிமுகம்
(ஏ) நிதிக் கொள்கைகள் பற்றிய அறிமுகம்
(ஐ) சந்தை சக்கரம்

(iii) நடைமுறை சர்வதேச பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மூலம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள்.

(அ) நடைமுறை சர்வதேச பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய தாக்கங்கள் (அந்தந்த சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய உலகப் பொருளாதார நிலைகளுக்கு நடைமுறையில் பொருத்தமான தலைப்பின் ஊடாகப் பதிலழிக்க வேண்டி ஏற்படும்).

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2012, ஏப்பிறல் 20.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 2012**

First and Second Efficiency Bar Examinations for Officers in Grade III of the Sri Lanka Planning Service - 2012

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும்
மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

(விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது)

விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :

முதலாவது - 1
இரண்டாவது - 2 [ ]

(வர்த்தமானியின் 02ஆம் பந்தியைப் பார்க்கவும். இரண்டு பரீட்சைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் பின்னால் இடப்பட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் :.....................................
(ஆங்கில கெப்பிற்றல்) எழுத்தில் உ-ம் :- SILVA B.A

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :- ..............................

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதவும்) : ........................

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :......................

2.2 பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :.............

3. 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியின்கீழ் தோற்றும் பாடங்கள் :

(ஒரு விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பிக்கும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய 4(i) அல்லது 4(ii) இற்கு மாத்திரமே பூர்த்திசெய்தல் வேண்டும்.

(i) முதலாவது வினைத்திறன் காண் தடை

| பாடம் | பாட எண் |
|---|---|
| ................................ | |
| ................................ | |
| ................................ | |
| ................................ | |
| ................................ | |

(ii) இரண்டாவது வினைத்திறன் காண் தடை

| பாடம் | பாட எண் |
|---|---|
| ................................ | |
| ................................ | |
| ................................ | |
| ................................ | |
| ................................ | |

5. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இல் சேர்ந்த திகதி : ...........
(சரியாக கடமையினைப் பொறுப்பேற்ற திகதியினைக் குறிப்பிடுதல் வேண்டும்)

6. அரச மொழிகள் கொள்கைக் குறிக்கோள்களுக்கான பழைய நுழைவாளர் ஒருவரா அல்லது புதிய நுழைவாளர் ஒருவரா ? : ...........

7. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகம் ஒன்றாயின் அந்த அலுவலகத்தின் பெயர்) :...........

8. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையாகவா? :............

9. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையாக அல்லாவிடில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்-

| |
|---|
| பற்றுச்சீட்டினை கழன்று போகாமல் நன்றாக ஒட்டவும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்) |

10. மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் சரியானவைகள் என்பதையும் மேற்குறிப்பிடப்பட்ட மொழியில் பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரித்துள்ளதென்பதையும் உறுதிமொழிகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

...................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் தமது பிரதேச தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் உத்தியோகத்தரொருவராகிய, எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமுள்ள திரு./ திருமதி/ செல்வி ......................., ............ ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர் :....................
பதவிப் பெயர்:.................
முகவரி :...................

..................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்களைப் பரீட்சித்துப் பார்த்தேன் எனவும் அவை சரியானவை எனவும்

(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியானவர் எனவும்

சான்றுபடுத்துகின்றேன்.

................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையை இடவும்).

பதவி :..........
திகதி :..........

4-420

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்காக தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நிறுவனம் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்கத்தின் மேலே "புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்பட வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதி 2012.05.18 ஆந் திகதி ஆகும்.

2012, ஆடி மாதத்தில் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் ஒன்று அல்லது அது தொடர்பான கடிதம் ஒன்று தபாலில் தொலைந்து போனதாக அல்லது தாமதமானதாகச் செய்யப்படும் முறையீடுகள் தொடர்பாக கவனிக்கப்பட மாட்டாது. கடைசி நாள் வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதினால் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- பதவி நிரந்தரமானது ; ஓய்வூதியம் வழங்கப்படும். விதவைகள்/தபுதாரி மற்றும் அனாதைகள் நிதியத்தில் அங்கத்துவம் பெற வேண்டும்.

3. **வயது எல்லை**.- 21 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்**.- II ஆம் தரம் (எம்என் 5-2006-ஏ) ரூபா 16,720-10 x 320 - 11 x 365- 15 x 450 - ரூபா 30,685.

5. **கல்வித் தகைமைகள்**.- புள்ளிவிபரவியல் கணிதம், பொருளியல், கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், சமூக விஞ்ஞானம், புவியியல், குடியியல் என்ற பாடங்களில் குறைந்தபட்சம் ஒரு பாடமாவது உள்ளடக்கப்பட்ட, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

6. **உடல் ரீதியான தகைமைகள்** :

(i) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்த ஒரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கு ஏனைய சகல விதங்களிலும் உடல் ரீதியாகத் தகுதியுள்ளவராக இருக்க வேண்டும் ;

(ii) பதவியில் கடமைகளைச் செய்வதற்குப் போதுமான உடல் ரீதியான தகைமைகள் உள்ளவராக இருக்க வேண்டும்.

7. **ஏனையவை** :

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புள்ளவராக இருக்க வேண்டும்.

*8.* **சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் முறை**.- *அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அல்லது பிரதான பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியானவர்களை எழுத்துமூலம் பரீட்சைக்குத் தோற்றுவித்து பெறப்படும் புள்ளிகளின் மதிப்பெண்களுக்கமைய மற்றும் தகுறித்த வெற்றிடங்களுக்கமைய நேர்முகப் பரீட்சைக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கு சேர்த்துக்கொள்ளப்படும் நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.*

*(புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பாடவிதானம் இலக்கம் 9.1 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.)*

*9.* **எழுத்துமூலப் பரீட்சை**.- *பின்வரும் பாடங்கள் உட்படுமாறு எழுத்துமூல வினாத்தாள்கள் ஊடாக திறமையைப் பரீட்சித்து அதிகூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் முறையான நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் தகுதிபெறுவதற்குக் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் 40% புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும். எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு நியமனங்கள் வழங்கப்படும்.*

*பரீட்சைக்குரிய பாடங்கள்.- (பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது) :*

(i) *பொது உளச்சார்பு ;*
(ii) *பொது அறிவு.*

*9.1 புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பாடவிதானம் :*

(i) *இந்தப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்றது.*

(ii) *பரீட்சை முறை :*

* *பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற மொழிகள் மூலம் நடாத்தப்படும்.*

* *பரீட்சைக்கு தோற்றமளிப்பவர் பரீட்சையின்போது தான் தோற்றமளிக்கும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.*

**பாடவிதானம்** :

(i) *பொது உளச்சார்பு.- (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். விண்ணப்பதாரர்களின் விவேக ஆற்றலை அளவிடும் நோக்கங் கொண்ட வினாத்தாளாகும். சகல கேள்விகளுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.*

(ii) *பொது அறிவு.- (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமான தற்கால நிகழ்ச்சிகள், புதிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் பற்றி விண்ணப்பதாரர்களின் அறிவை அளவிடும் நோக்கம் கொண்ட வினாத்தாளாகும். விரிவான மற்றும் சுருக்கமான விடைகள் என்ற வகையிலான கேள்விகளைக் கொண்டிருக்கும்.*

*9.2* **பொதுவான நிபந்தனைகள்**.- (i) *இந்தப் போட்டிப் பரீட்சை சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் என்ற மொழிகள் மூலம் மாத்திரம் நடாத்தப்படும். வினாத்தாள்கள் இரண்டுக்கும் ஒரே மொழியில் விடையளிக்கப்பட வேண்டும். கோரப்படும் மொழியை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சைக்கு தோற்றமளிப்பவர்கள் கீழ்ப்படிய வேண்டும். அந்தச் சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட நேரிடும்.*

(ii) *பரீட்சைக் கட்டணம் ரூ. 500 ஆகும். அந்தக் கட்டணத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் வரவு வைக்கும்படி, நாட்டில் உள்ள எந்த ஒரு தபால் நிலையத்திலும் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் ஒரு கரையை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிடவும். அந்தப் பற்றுச்சீட்டின் ஒரு நிழல் பிரதியை தங்களிடம் வைத்திருத்தல் உகந்ததாயிருக்கும்.*

(iii) *பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்த ஒரு காரணத்திற்காகவும் மீண்டும் வழங்கப்பட மாட்டாது.*

(iv) *இந்தப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.*

(v) *வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்களே பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று உத்தேசித்து சகல விண்ணப்பதாரர்களுக்கும் அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.*

**குறிப்பு**.- *அனுமதி அட்டை இல்லாமல் பரீட்சை நிலையத்திற்கு நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதியில் பரீட்சை நிலையத்தின் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது உறுதிப்படுத்தப்பட்ட தமது கையொப்பத்துடனான அனுமதி அட்டையாகும். ஒரு விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதினால் அவர் தகைமைகள் உள்ளவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதக்கூடாது.*

(vi) *விண்ணப்பப்படிவம் செ. மீ. 22-29 அளவிலான ஏ4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். 1 இல் இருந்து 6 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் 7 இல் இருந்து 12 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும், மிகுதி 3/ 4 பக்கங்களிலும் உள்ளவாறு தயாரிக்கப்பட வேண்டியுள்ளதோடு அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினாலேயே தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்றல்லாத விண்ணப்பப்படிவங்களும்*

பூர்த்திசெய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் என்பதோடு அந்த விண்ணப்பப் படிவத்தின் நிழல் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாயிருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு சமமானதா என்பதைப் பற்றி விண்ணப்ப தாரரினால் விசாரித்துப் பார்க்க வேண்டும் எனவும், அவ்வாறு இல்லையெனில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனவும் மேலும் அறிவிக்கின்றேன். இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய தயாரிக்கவும்.

(vii) விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றதற்கான அறவித்தல் வழங்கப்படமாட்டாது என்பதோடு, பரீட்சைக்காக விண்ணப்பதாரர் களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

(viii) பூர்த்தியல்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(ix) பரீட்சையைப் பிற்போடும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் திணைக்களத் தலைவரையே சாரும்.

(x) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட வுடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 தினங்கள் அல்லது 3 தினங்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனில் அறிவித்தலில் குறிப்பிட் டுள்ளவாறு அதைப்பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவும். உங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மற்றும் கொடுப்பனவு செய்த பற்றுச்சீட்டின் உறுதிப் படுத்தப்பட்ட நிழல்பிரதிகளும் பதிவுசெய்த பற்றுச்சீட்டும், கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்காக பக்ஸ் இலக்கம் ஒன்றும், குறிப்பிடப்பட்ட உங்கள் கோரிக்கைக் கடிதத்தையும் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் மிகச் சிறந்ததாயிருக்கும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- அரச மொழியல்லாத மொழிமூலம் கடமையில் சேர்ந்த உத்தியோகத்தர் குறிப்பிட்ட அரச கரும மொழித்திறனை தகுதிகாண் காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அரச கரும மொழி 2007.05.28 ஆந் திகதியுடைய இல. 7/2007 ஐக் கொண்ட சுற்றறிக்கைக்கமைய அதன் 1 ஆம் பிரிவுக்குரிய தரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை நிலையத்தின் அதிகாரி திருப்தியடையுமாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்கப்படும் :-

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) வெளிநாட்டுப் பிரயாண அனுமதிப்பத்திரம்.

12. எழுத்துமூலப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங் களைச் சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்துக்கொள்ள வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) பட்டம் மற்றும் ஏனைய பொருத்தமான கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) நற்சான்றிதழ்கள் 2 (அதில் ஒன்று பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் ஒருவரினால் வழங்கப்பட்டதாயிருக்க வேண்டும்.) ;

(iv) தொழில் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் (உள்ளதெனில்) ;

(v) சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்த ஆக உயர்ந்த பரீட்சைகள் தொடர்பான சான்றிதழ்கள்.

**குறிப்பு** :

(அ) விண்ணப்பப்பத்திரத்துடன் எந்த ஒரு ஆவணத்தை அல்லது அதன் பிரதியை இணைக்கக் கூடாது ;

(ஆ) கேட்கும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்ப தற்கு தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப் பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

13. அரச சேவையில்/மாகாண அரச சேவையில், அரச, கூட்டுத்தாப னங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள், தமது திணைக்கள/ நிறுவன தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்பு சகல விண்ணப்பதாரர்களும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் கட்டாயமாகும். ஒரு நிறுவனப் பரீட்சைக்கு தோற்றும் ஒரு விண்ணப்பதாரர் அவரின் கையொப்பத்தை தான் சேவை செய்யும் நிறுவனத்தின் தலைவரைக் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர்/ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரபல நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் உள்ள ஒரு உத்தியோகத்தர் ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த இணைந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது உள்ளூராட்சி சேவையில் நிரந்தர உயர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் தலைவர் அல்லது தலைமை பிக்கு ஒருவர் அல்லது வேறு மதத்தைச் சார்ந்த சமயஸ்தானத்திற்குப் பொறுப்பான மதகுருமார்களில் உயர்நிலை வகிக்கும் ஒருவரிடம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

14. விண்ணப்பங்கள் அல்லது அது சம்பந்தமான ஏனைய ஆவணங்கள் சகலதும் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம் தவிர்ந்த வேறு எந்த நிறுவனத்திற்கோ திணைக்களத்திற்கோ அல்லது வேறு எந்த ஒரு உத்தியோகத்தரின் பெயருக்கோ அனுப்பப்படக்கூடாது.

15. இந்த வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் பிரிவில் (ii) ஆம் பந்தியில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பாக உள்ள பொது நிபந்தனைகளை அவதானிக்கவும் (பொது நிபந்தனைகளின் 9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர).

டி. பி. பி. சுரன்ஜனா வித்யாரத்ன,
பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்
திணைக்களம்,
2012.03.27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொமைதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

Open Competitive Examination for Recruitment to the Post of Statistical Officer - Grade II in the Department of Census and Statistics - 2012

பரீட்சை இலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம் :
சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4 [ ]
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக.)

1. 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வரும்படி முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   உதாரணம் :- SUNIL, A.B.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.2 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   2.3 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 3.1 பால் :
   பெண் -1
   ஆண் -0 [ ]
   (பொருத்தமான இலக்கத்தைக் கூட்டிற்குள் எழுதுக)

   3.2 பிறந்த திகதி :

   ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. இனம் :
   (பொருத்தமான கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | | இந்தியத் தமிழர் | |
| இலங்கைத் தமிழர் | | மலாயர் | |
| இஸ்லாமியர் | | ஏனையவர் | |

6. வசிக்கும் மாவட்டம் :----.
   பிரதேச செயலாளர் பிரிவு :----.

7. செலுத்தப்பட்ட கட்டணம் (பற்றுச்சீட்டின் நிழல் பிரதி ஒன்றை விண்ணப்பதாரர் வைத்திருத்தல் நன்று) :
   பணம் செலுத்தப்பட்ட திகதி :----.
   பணத்தொகை :----.
   தபால் நிலையம் :----.
   பற்றுச்சீட்டு இலக்கம் :----.
   (பற்றுச்சீட்டு கழறாதவாறு அதன் ஒரு கரையை இதில் ஒட்டிவிடவும்.)

8. ஒவ்வொரு மொழியிலும் பெற்றுள்ள அதியுயர் சித்தி (பரீட்சையின் பெயரை எழுதவும்) :
   சிங்களம் :----.
   தமிழ் :----.
   ஆங்கிலம் :----.

9. கல்வித் தகைமைகள் :----.
   பட்டம் சம்பந்தமான விபரம் :

| பட்டம் | நிறுவனம் | சித்தி | பாடங்கள் | வழங்கப் பட்ட திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

ஏனைய கல்வித் தகைமைகள் :

| பாடம் | நிறுவனம் | பாடங்களின் விபரம் |
|---|---|---|
| | | |

10. வேறு தகைமைகள் :----.

11. தற்பொழுது ஈடுபட்டுள்ள தொழில் மற்றும் இதற்கு முன்னர் ஈடுபட்டிருந்த தொழில்கள் :

| நிறுவனம் | பதவி | இலிருந்து | வரை | சம்பளம் (மாதம்) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

12. நீங்கள் பயங்கர குற்றம் ஒன்றுக்காக நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளீர்களா ? அப்படியாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதியுரைக்கின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னைத் தெரிவு செய்வதற்கு முன்பு அறிந்துகொண்டால் தகைமை அற்றவனாவேன் எனவும் நியமனத்திற்குப் பின்னர் தெரிந்துகொண்டால் எந்தவித நஷ்டஈடும் இல்லாமல் சேவையிலிருந்து நீக்குவதற்கு உரித்தாவேன் எனவும் நான் அறிந்துள்ளேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிசெய்தல்**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவர் என்றும், பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும், என் முன்னால் அவரை கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

விண்ணப்பதாரர் அரச திணைக்களமொன்றில்/ நிறுவனத்தில் கடமையாற்றுபவர் எனில், பின்வரும் சான்றிதழுடன் தமது திணைக்களம் அல்லது நிறுவனத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ........................................ தற்போது இந்த திணைக்களத்தில் ................................................ ஆக நிரந்தர/ தற்காலிகமாக/ அமைய உத்தியோகத்தராக சேவை செய்கிறார். அவர் (அறிவுரை கூறுதல் தவிர) எந்த ஒரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லையெனவும், இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அவரின் செயற்பாடுகள் மற்றும் வேலைகள் சிறப்பாக உள்ளது எனவும் குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அவர் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமைகள் உள்ளவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

4-423

---

## இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2012

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2009 ஆம் வருடத்திற்காக பயிலுனர்களை சேர்த்துக்கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தராதரங்களைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

2. **குறைந்த தராதரம்**.- (அ) 2012.05.31 ஆந் திகதியன்று வயது வருடம் 16-25 இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தராதரம்.- சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 விடயங்களில் க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தலுடன் முதல் தடவையில் குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அக்கல்வித் தராதரத்தை 2011.12.31 இற்கு முன்பு பூர்த்திசெய்திருத்தலும் வேண்டும்.

3. **பயிற்சிநெறி**.- பயிலுனர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்கு கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சியை அத்தொழிலுக்கு ஏற்ற காலவெல்லைக்குள் கற்பதற்கு இடமளிக்கப்படும். பயிற்சிநெறி சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடாத்தப்படும். கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

| | |
|---|---|
| (1) டீசல் என்ஜின் இயந்திர நுட்பவியலாளர் | - வருடம் 2 1/2 |
| (2) ஒட்டும் நுட்பவியலாளர் | - வருடம் 3 |
| (3) மின் நுட்பவியலாளர் (சக்தி) | - வருடம் 3 1/2 |
| (4) இயந்திரவியலாளர் (பொது) | - வருடம் 3 1/2 |

**விண்ணப்பங்கள்**.- விண்ணப்பதாரியினால் இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தட்டச்சு கடதாசியில் (ஏ4) கடதாசியில் தயாரித்து முழு விபரமும் சரியான முறையில் குறிப்பிடல் வேண்டும். தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. **பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்**.- (1) பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல் எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவையான குறைந்த தராதரங்களை உடையதும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துமூல பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(2) எழுத்துமூல பரீட்சை கணிதம் மற்றும் அடிப்படை தொழில்நுட்ப அறிவும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்துமூல பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறியின் தன்மைக்கு ஏற்ப தொழில் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(3) எழுத்துமூல மற்றும் தொழில் பரிசோதனையில் கூடிய முழுப்புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழிமூலம்**.- பரீட்சை, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்காக மீண்டும் வழங்கப்படாத ரூபா 500 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை தபால் அலுவலகத்தில் மாற்றிக்கொள்ளக்கூடியவாறு ''புகையிரத முகாமையாளர்'' எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை மூலம் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீண்டும் வழங்கப்பட மாட்டாது.

8. **பரீட்சை நிலையம்**.- சகல தராதரங்களையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளுக்காக கொழும்பில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்**.- நிறுவனத்தின் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கு ஏற்ற காலவெல்லைக்குள் பயிற்சியை திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. பயிற்சியைப் பெறும் காலவெல்லைக்குள் பயிலுனர்களுக்காக தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

11. பயிற்சியின் பின்பு திணைக்களம் தொழில் வழங்காது.

12. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை தயாரித்து, ''பணிப்பாளர், இலங்கை புகையிரத ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலஜேபுதொபநி - 2012'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

13. **விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி**.- விண்ணப்பப்படிவம் 2012.06.30 ஆந் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

எஸ். எம். ஜீ. என். தர்மசேகர,
மேலதிக புகையிரத பொது முகாமையாளர் (நிர்வாகம்),
புகையிரத பொது முகாமையாளருக்காக.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10,
2012.01.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2012**

1. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ், ஆங்கிலத்தில்) :----.
2. முகவரி (சிங்களம்/தமிழ், ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. கல்வித் தராதரம் (க. பொ. த. சாதாரண தரம்) :

முதலாம் தடவை

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

இரண்டாம் தடவை

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

7. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :----.

8. விண்ணப்ப அறிவித்தலின்படி தேர்ந்தெடுத்துள்ள தொழில் பயிற்சி :

1. ----------------.

2. ----------------.

9. ---------------- தபால் அலுவலகத்திற்கு ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் ---------------- ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன்.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிமொழிகிறேன். இங்கு குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பொய்யானதென நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

4-426

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2011 (2012)**

மேலே குறிப்பிடப்பட்ட சேவையில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்**.- முதலாம், இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' விலும் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை**

| 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | | 2 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) | தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | நிதி முறைமைகள் | 03 | 01 | 1 ஆம் பகுதி | 03 |
| 02 | நிருவாகம் | 03 | 02 | 2 ஆம் பகுதி | 03 |
| 03 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் I | 02 | 03 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் I | 03 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் II | 03 | 04 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் II | 03 |
| 05 | விசேட வினாப்பத்திரம்* | 03 | 05 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் III | 03 |
| | | | 06 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IV | 03 |
| | | | 07 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் V | 03 |
| | | | 08 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VI | 03 |
| | | | 09 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VII | 03 |
| | | | 10 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VIII | 03 |
| | | | 11 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IX | 03 |
| | | | 12 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் X | 03 |
| | | | 13 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் XI | 03 |

*கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் பகுதி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள XI வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சைகளுக்கு (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.

6. இப்பரீட்சையின் பொருட்டு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்க பரீட்சார்த்திகளுக்கு இயலுமாகின்ற வகையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட இரு பரீட்சைகளுக்கும் சமுகமளிப்பதானால் ஒவ்வொரு பரீட்சையின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில்

அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும் மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவார்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2012.06.29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே, பேராதனை

11. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட ஒளிப்படப் பிரதி மற்றும் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டுடன், கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினைக் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு அறியக்கொடுப்பது சிறந்ததாகும்.

12. மேலே II ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971, யூன் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ். ஈ. 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா 1,000.00 |
| ஒரு பாடம் | - ரூபா 500.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் பணிமனையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

கே. எம். ரி. கேந்தரகம,
செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2012.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான*
*வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2011 (2012)*
*EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2011 (2012)*

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)
(வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் அமர்வதாயின் விண்ணப்பங்கள் 2 அனுப்புதல் வேண்டும்)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பரீட்சை
முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 1
இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(உதாரணம் :- NIMALSIRI, K. A)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3. பதவிப் பெயர் :----.
திணைக்களத்தின் பெயர் :----.

4. தபால் முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :----.

5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............
(v) பாட எண் ☐☐ பாடம் ..............

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

9. செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும், *விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும், பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

பின்னிணைப்பு "ஆ"

(அ) இலங்கை கால்நடைவள உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :-

பகுதி I – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி II – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி III :

வினாத்தாள் I - தொற்றுநோயியல்
வினாத்தாள் II - கால்நடைப் பொருளியல்
வினாத்தாள் III - மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
வினாத்தாள் IV - விவசாய விஸ்தரிப்பு
வினாத்தாள் V - பரம்பரையியலும் சினைப்படுத்தலும்
வினாத்தாள் VI - விலங்கு உடற்றொழியியலும் இனப்பெருக்கமும்
வினாத்தாள் VII - வீடமைப்பு முகாமைத்துவம்
வினாத்தாள் VIII - விலங்குப் போசணை
வினாத்தாள் IX - பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
வினாத்தாள் X - பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடணவியலும்
வினாத்தாள் XI - பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியல்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

4-480

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை
இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2011

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்**.- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2012 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும், இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்**.- இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு நகரப் பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள்

அண்மையிலுள்ள வேறொரு நகரப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல்.

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல்.

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களாயிருத்தல்.

**குறிப்பு**.- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும், மேலே 4 ஆவது பிரவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாகள், மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத நிறுவனங்கள், பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2012, மே மாதம் 14 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.-

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2012, மே மாதம் 18 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
(விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.)

5.5 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2011" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.6 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. இப்பரீட்சைக்கு முதற்தடவை தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் ரூபா 150 ஆகும். நூன சித்தி பெற்ற பரீட்சார்த்திகளுக்கு ஒரு பாடத்திற்கு ரூபா 50 ஆகும்.

6.1 **கட்டணம் செலுத்தும் முறை**.- உரிய தொகையை அஞ்சலகத்தில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா அதிபர், மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித் தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர் பாடசாலை அதிபர், அரபுக்கல்லூரி அதிபர், வருடமொன்றிற்கு ரூபா 2,40,360 இற்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு (7) தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :-----.
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயர் :-----.
(இ) அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள கணனி இலக்கம் :-----.
(ஈ) முழுப் பெயரும் விலாசமும் :-----.
(உ) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் :-----.
(ஊ) விண்ணப்பத்தை அனுப்பி வைத்த தபால் நிலையம் :- ----.
(எ) பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-----.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைச் சான்றுபடுத்தலும்** :

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் இரண்டு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்திபெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கணிக்கப்படுவர். (இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும் :-

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமை சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2012, மாச்சு மாதம் 29 ஆந் திகதி.

**இணைப்பு - 1**

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**

இப்பரீட்சை ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும், வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதிய 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.

**முதலாம் வினாப்பத்திரம்**

1. **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும்) அரபு மொழியும்**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்
* அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
* ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்
* ஈமானும், குப்றும்
* ரித்தத், நிபாக்
* அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
* சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
* ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
* சட்ட மூலதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
* ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
* இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
* துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
* துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
* பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி
- * உறுப்பமைய எழுதுதல்
- * சிறு வாக்கியங்களை எழுதுதல்
- * இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
- * முக்கியமான ஸூறாக்களையும், ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

***இரண்டாம் வினாப்பத்திரம்***

**2. அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)**

2.1 இபாதத் பற்றிய விளக்கம்
- * இபாதத்தின் பிரிவுகள்
- * தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்
- * நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- * நீரும் அதன் வகைகளும்
- * வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்
- * முக்கியத்துவம்
- * விதி முறைகள்
- * திரட்டலும் விநியோகமும்
- * ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு
- * முக்கியத்துவம்
- * விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்
- * முக்கியத்துவம்
- * விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ்: நிறைவேற்றும் முறை
- * பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- * பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தின் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
- * உழைப்பின் முக்கியத்துவம்
- * பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
- * வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
- * நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- * குடும்ப வாழ்வு
- * கணவன்-மனைவி
- * பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும்
- * தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
- * ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

***மூன்றாம் வினாப்பத்திரம்***

**3. ஸீறாவும் தாரீகும்**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்
- ● நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  - * குடும்பம், பரம்பரை
  - * இளமைப்பருவம்
  - * நற்குணம்
  - * திருமணம்
- ● நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  - * நுபுவ்வத் கிடைத்தல்
  - * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  - * மிஃராஜ்
  - * ஹிஜ்ரத்
- ● மதீனா வாழ்க்கை
  - * சமூக அரசியல் செயற்பாடு
  - * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  - * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.
- * ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
- * குலபாஉர்ராஷிதூன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
- * உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
- * பைத்துல் முகத்தஸ் - வரலாறு
- * இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
- * முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
- * பின்வருவோர் பற்றிய வரலாறு
  - * இமாம் புகாரி (ரஹ்)
  - * இமாம் ஷாபிஈ (ரஹ்)
  - * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
  - * இமாம் அப்துல் காதி ஜீலானி (ரஹ்)
  - * இமாம் ஷாதுலி (ரஹ்)

***நான்காம் வினாப்பத்திரம்***

**4. அக்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்
- * அக்லாக் பற்றிய விளக்கம்
- * ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு

- * அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
- * உளத்தூய்மை (இஃலாஸ்)

*4.2* தக்வா

- * வரஉ, ஸுஹ்த்
- * முராகபா, முஹாஸபா
- * ஷவ்க் (இறையன்பு)

*4.3* ஈகை

- * தியாகம்
- * நன்றியுணர்வு
- * பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
- * பணிவு
- * நேரம் பேணுதல்
- * அவையவங்களைப் பேணுதல்-நாவு, கண், காது, பாலுறுப்பு
- * பிறரை மதித்தல்
- * நீதியும் நேர்மையும்
- * இளைஞர், யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
- * ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

*4.4* இஸ்லாமிய நீதிமுறை

***இணைப்பு - 2***

**குறித்த மாவட்டங்களிலே பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் அவற்றின் இலக்கங்களும்**

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 |
| கொழும்பு (மத்தி) | 01 | |
| பம்பலப்பிட்டி | 02 | |
| **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| திஹாரிய | 03 | |
| மாபோலை | 04 | |
| மல்வானை | 05 | |
| நீர்கொழும்பு | 06 | |
| கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 |
| பாணந்துறை | 08 | |
| களுத்துறை | 09 | |
| அழுத்கம | 10 | |
| **காலி மாவட்டம்** | | 04 |
| காலி | 11 | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 |
| வெலிகமை | 12 | |
| மாத்தறை | 13 | |
| **தங்கல்லை மாவட்டம்** | | 06 |
| ஹம்பாந்தோட்டை | 14 | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 |
| மாவனல்லை | 15 | |
| வரகாபொலை | 16 | |
| கன்னத்தோட்டை | 17 | |
| **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| குளியாபிட்டி | 18 | |
| குருநாகல் | 19 | |
| மெல்சிறிபுர | 20 | |
| பொல்கஹவெல | 21 | |
| கெகுனாகொல்ல | 22 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 |
| நுரைச்சோலை | 23 | |
| புத்தளம் | 24 | |
| சிலாபம் | 25 | |
| **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| அநுராதபுரம் | 26 | |
| கெக்கிராவை | 27 | |
| கலென்பிந்துனுவெவ | 28 | |

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| **பொலன்னறுவை மாவட்டம்** | | 11 | **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| கதுறுவெல | 29 | | மாத்தளை | 30 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 | **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| கண்டி | 31 | | நுவரெலியா | 35 | |
| நாவலப்பிட்டி | 32 | | | | |
| தெல்தொட்டை | 33 | | | | |
| கெலி ஓயா | 34 | | | | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | 15 | **பதுளை மாவட்டம்** | | 16 |
| எஹலியகொடை | 36 | | பதுளை | 38 | |
| பலாங்கொடை | 37 | | வெலிமடை | 39 | |
| **மொனராகலை மாவட்டம்** | | 17 | **அம்பாறை மாவட்டம்** | | 18 |
| பிபிலை | 40 | | அக்கரைப்பற்று | 41 | |
| | | | பொத்துவில் | 42 | |
| | | | கல்முனை | 43 | |
| | | | சம்மாந்துறை | 44 | |
| | | | இறக்காமம் | 45 | |
| | | | நிந்தவூர் | 46 | |
| | | | ஒலுவில் | 47 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | 19 | **திருகோணமலை மாவட்டம்** | | 20 |
| காத்தான்குடி | 48 | | மூதூர் | 51 | |
| ஏறாவூர் | 49 | | கிண்ணியா | 52 | |
| வாழைச்சேனை | 50 | | திருகோணமலை | 53 | |
| **வவுனியா மாவட்டம்** | | 21 | **மன்னார் மாவட்டம்** | | 22 |
| வவுனியா | 54 | | மன்னார் | 55 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | 23 | **கிளிநொச்சி மாவட்டம்** | | 24 |
| முல்லைத்தீவு | 56 | | கிளிநொச்சி | 57 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | 25 | | | |
| யாழ்ப்பாணம் | 58 | | | | |

4-546

---

திருத்தம்

## இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)

2012, மாச்சு 23 ஆந் திகதிய 1751 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் வெளியிடப்பட்ட "இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)" அறிவித்தலில் 3 ஆம் பந்தி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்கப்படுகின்றன :-

3. பந்தி-

"**நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கை :**

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் நிலவும் வெற்றிடங்கள் 114 திறந்த ஆட்சேர்ப்பின் மூலம் பூரணப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி :**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைய தீர்மானிக்கப்படும்"

குறித்த வர்த்தமானப் பத்திரிகையில் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 2012.04.23 ஆவதுடன் வர்த்தமானிப் பத்தரிகையில் உள்ள ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றி அப்படியே இருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரையின் பெயரில்,

பீ. வீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2012, ஏப்பிறல் 05.

4-601

## அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012

அரசாங்க சேவையில் கனிஷ்ட ஊழியர்களை அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரமுயர்த்தும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. மத்திய அரசு சேவையைச் சார்ந்த கனிஷ்ட ஊழியர்களுக்காக இப்பரீட்சை பின்குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களும் நகர இலக்கங்களும் பின்குறிப்பிடப்படுகின்றன. போதியளவு பரீட்சார்த்திகள் தோற்றாதவிடத்து அல்லது ஏனைய காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்யுமிடத்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்புப்படி பரீட்சை நிலையம் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும் :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருணாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இச்சட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவதற்கு நேரிடும்.

4. பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய மொழி மூலம் இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தமது விருப்பப்படி இதில் ஏதேனும் ஒரு மொழிமூலத்தில் மட்டும் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (iv) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி அரச முகாமை உதவியாளர் சேவையில் III, II மற்றும் I ஆகிய வகுப்புகளுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 13,990-10X145-11X170-6X240-14X320-23,230 ஆகும். ரூ. 15,440 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு II இற்கான தரமுயர்வும் ரூ. 17,310 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும்.

**குறிப்பு**.- நியமனம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைப் படுத்தப்படும் சம்பள அதிகரிப்பு சட்டதிட்டங்களுக்கு அமைய, அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு நலன்களும் வழங்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (i) இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்கு நியமனத் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றும் அடிப்படையின்கீழ் நியமனங்கள் வழங்கப்படும். அவர்களின் பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். அரச முகாமை உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த பின்னர் சேவையில் நிரந்தரப்படுத்தப்படும்.

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனம் பெறும் பரீட்சார்த்திகள் இடமாற்றங்களுக்கும் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(iii) நியமனம் கிடைக்கப்பெற்று 5 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன்படி இரண்டாவது அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

7. **நியமனத்தின் பொருட்டு தெரிவுசெய்யும் முறை**.- மத்திய அரசின் வெற்றிடங்களுக்காக மத்திய அரச சேவையிலுள்ள கனிஷ்ட ஊழியர்கள் மட்டும் போட்டிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். பரீட்சைக்கான ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் நூற்றுக்கு நாற்பது வீதம் (40%) அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்து, அவர்களின் மொத்தப் புள்ளிகளுக்கமைய திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படும்.

8. **தகைமைகள்**.- இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்திகளும் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் :

(i) 2007.08.24 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (iv) இன்படி பீஎல்-1-2006ஏ, பீஎல்-2-2006ஏ மற்றும் பீஎல்-3-2006ஏ என்னும் சம்பள குறிகளின் கீழ்வரும் சம்பள அளவுத்திட்டத்தை கொண்டுள்ளதும் நிரந்தரப் பதவியை வகிக்கும் மத்திய அரச சேவையின் கனிஷ்ட ஊழியராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தியிருத்தலும் வேண்டும். (தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 1 இல் கூறப்பட்ட வரைவிலக்கணத்துக்குள் அடங்கும் அரசாங்க உத்தியோ கத்தராக இருத்தல் வேண்டும்.)

(ii) 2012.05.21 ஆந் திகதிக்கு உடன் முன்னராக நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருடகாலப் பகுதி தொடர்ச்சியாகவும், முனைப்பாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன் அதனைப் பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(iii) 2001.11.26 ஆந் திகதிக்குப் பின்னர் சேவையில் நிரந்தரப்படுத்தியுள்ள பரீட்சார்த்திகள் கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் மொழி/ இலக்கியம் என்பவற்றுடன் எண்கணிதம்/தூயகணிதம்/ஆரம்ப கணிதம்/ வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(1) ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையாக மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டு காலவெல்லையாக கணக்கிலிடப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் சேவை யாற்றியுள்ள தற்காலிக/ அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான 5 ஆண்டு காலவெல்லைக்காக கணக்கிலிடப்படமாட்டாது.

(2) அரசாங்க சேவையிலுள்ள மோட்டார் வாகனச் சாரதியாளர்கள் ஏனைய தகைமைகளைக் கொண்டிருப்பின் அவர்களின் சம்பள முறையைப் பற்றி கவனத்தில் கொள்ளாது இப்பரீட்சைக்கு தோற்றலாம்.

(3) மேலே (ii) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறான ஐந்தாண்டு (05) திருப்திகர சேவை பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் இப்பரீட்சையின் செயற்பாடுகளுக்காக திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ளவர்கள் எனக் கருதப்படுவர் :

(அ) 2012.05.21 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து ஆண்டுகளில் (05) சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) 2012.05.21 ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து ஆண்டுகளில் (05) ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாது இருத்தல் வேண்டும்.

(4) நியமனத்தின் பொருட்டு விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுமிடத்து திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

(5) பகுதி தொழில்நுட்பச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களோ அல்லது ஏதேனுமொரு செயற்பாட்டிற்காக பயிற்றப்பட்டவர்களோ அல்லது அரசினால் விசேட முறையில் பயிற்சியளிக்கப்பட்ட எந்தத் தரத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவர்களாக கருதப்படுவர். உதாரணமாக பொறியியல் மற்றும் தொழிற்சாலைத் தரங்களிலுள்ள ஊழியர்களும், சுகாதாரத் திணைக்களத்தின் மருத்துவிச்சிகளும் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்களாவர். எவரேனுமொரு ஊழியர் தகைமையுடையவரா அல்லது தகைமையற்றவரா என்பதில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் பரீட்சார்த்தி அவரின் திணைக்களத்தில் விசாரிக்க வேண்டுமென்பதுடன் குறித்த திணைக்களம் அது தொடர்பில் "பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன்" தொடர்புகொள்ள வேண்டும்.

இப்பரீட்சைக்காக தோற்றவுள்ள ஊழியரின் தகைமை பற்றி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சை உசாவும் வேளையில் சம்பந்தப்பட்ட திணைக்களம் சம்பள அளவுத்திட்டம் சகிதம் ஊழியரின் தொழில் தொடர்பான முன்னைய விபரங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அத்தொழிலைச் செய்வதற்கு வேண்டிய ஏதாவது பயிற்சி விண்ணப்பதாரிக்கு அளிக்கப்பட்டதா என்பதனையும் அந்தப் பயிற்சிக்கான கால எல்லை, அதன் தன்மை என்பவற்றையும் குறிப்பிட வேண்டும்.

(6) அரசாங்க சேவையின் தற்காலிக, அமைய ஊழியர்கள் சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளின் ஊழியர்கள், இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவர்களாவர்.

(7) அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த இணைந்த சேவை, கனிஷ்ட ஊழியர்களைத் தவிர்ந்த திணைக்களத்தின் வேறு எந்த ஊழியர்களும் பரீட்சைக்கு தோற்ற தகுதியற்றவராவார்கள்.

(8) பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தாம் திருப்தியுறும் வகையில் இதில் விதிக்கப்பட்டுள்ள தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யாமல் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையில் போதிய அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பினும், நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

9. **விண்ணப்பங்கள்** : (i) இப்பரீட்சைக்கு உட்சேர்வதற்கான விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் ஆரம்பம் தொடக்கம் 4.0 வரை முதலாவது பக்கத்திலும் மீதியை இரண்டாவது பக்கத்திலும் அடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டுமென்பதுடன் ஏற்புடைய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவுறாத மற்றும் முழுமை பெறாத தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவத்தை பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு பரீட்சார்த்தியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்தும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ii) பரீட்சைக் கட்டணம் 400 ரூபாவாகும். இப்பணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 என்ற வருமானத்

தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்துவதற்கு முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் பரீட்சார்த்திகளின் சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்பட்டு 2012.05.21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சென்றடையுமாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

(iv) இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத் துக்கமைய விண்ணப்பப் படிவத்தைத் தயார் செய்துகொள்ள வேண்டும் எனவும், விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையோ அல்லது முற்பிரதியையோ அனுப்பலாகாது எனவும் அறியத்தருகின் றேன். விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாறான ஒரு சான்றிதழ் திணைக்களத் தலைவர்களினால் வழங்கப்பட வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். இந்த நடைமுறைக்கு இணங்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம். 2012.05.21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு தமது விண்ணப்பத்தினை நேரகாலத்துடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

11. பரீட்சை ஆணையாளர் நாயகம் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவருக்கும் நேரசூசியின் பிரதி ஒன்றுடன் அனுமதி அட்டையையும் அனுப்புவார். அத்துடன் அவ்விபரங்கள் தொடர்பான அறிவித்தல் ஒன்றும் "தினமின", "தினகரன்", "டெயிலி நியூஸ்" ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டைகளை காட்டத்தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்பிற்கு வெளியிடமாயின் தமது அனுமதி அட்டை அனுப்பவேண்டிய பெக்ஸ் இலக்கமும் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதமும் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

12. பரீட்சைக்கு தோற்ற அனுமதியளித்தல் தகவுத் திறமையை ஏற்றுக்கொண்டதென அமையாது. பின்னர் ஒரு கட்டத்தில் அது நுண்ணியதாக ஆராயப்படும். இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர் எனப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் ஒரு விண்ணப்பதாரரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது நிராகரிக்கப்படும்.

13. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்.**- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சையின் பெறுபேறுகள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

14. **ஆள் அடையாளம்.**- இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காக பின்வரும் சாதனங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆள் அடையாள அட்டையொன்று ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டொன்று.

15. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்களத் தலைவர்கள் கடமை லீவு அளிக்குமாறு வேண்டப்படு கின்றனர். பிரயாணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

16. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிக கவனமாகவும் சரியாகவும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியினால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்மையற்றவையென தெரியவருமிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

17. **பரீட்சை திட்டம்.**- பரீட்சைக்கான பாடங்களும் ஒவ்வொரு பாடங்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன :

| பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) பொது அறிவு | 2 மணித்தியாலங்கள் | 100 |
| (ii) உளச்சார்பு பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 |
| | மொத்தம் | 200 |

பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) :

(i) சமூக, கலாசார, அரசியல் மற்றும் விஞ்ஞான விடயங்கள் தொடர்பான அறிவைப் பரீட்சித்தல் ;

(ii) உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சித்தல் ;

(iii) அரசாங்க அலுவலகமொன்றில் பயன்படுத்தப்படும் இலகுவான அலுவலக முறைகள், நாளேடு, விடயக்கோவை பதிவேடு, பணவுறுதி (வவுச்சர்), அசைவுப் பத்திரங்கள், வரவு

இடாப்பு, தின முத்திரை மற்றும் பெயர் முத்திரை, தபால் பைகள் ஆகிய அலுவலக உபகரணங்களும் அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்துதல் தொடர்பான பரீட்சார்த்தியின் பொது அறிவையும் கிரகித்தலையும் பரீட்சித்தல் ;

(iv) அரசாங்க நிறுவனங்களில் பேணிச்செல்லப்படும் சிறந்த தொடர்பாடல் முறைகள், சிறந்த முறையில் அலுவலகத்தையும் அதன் சூழலையும் பேணிச் செல்லுதல் மற்றும் சிறந்த முறையில் பொதுசன தொடர்பை பேணிச்செல்லுதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் கிரகித்தலையும் உளப்பாங்கையும் பரீட்சித்தல்.

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும் ; வினாக்களுக்கு வினாப்பத்திரத்திலேயே விடையளிக்க வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

பகுதி I - சுருக்கமான பதில்கள், உத்தேச வினாக்கள் 40 (40 நிமிடங்கள் - 40 புள்ளிகள்)

பகுதி II - ஒரு நிகழ்வு, கூற்று அல்லது பந்தி ஆகியவற்றிலிருந்து கேட்கப்படும் சுருக்கமான பதில்கள் உத்தேச வினாக்கள் 10 மற்றும் பகுதிக் கட்டமைப்பு முறையிலான 03 வினாக்கள் (80 நிமிடங்கள் - 60 புள்ளிகள்)

இந்தப் பகுதிக்கான விடைகளை வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டும் என்பதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

உளச்சார்புப் பரீட்சை : (காலம் : 1 மணித்தியாலம்)

(i) எண்கள், இலகுவான கணித வினாக்களை தீர்க்கும் ஆற்றல், வழங்கியுள்ள தகவல்களின்படி வரைவுகள் / அட்டவணைகள் என்பவற்றைத் தயாரித்தல் ;

(ii) பொது அறிவு மற்றும் தர்க்க ரீதியான ஆற்றல் ஆகியவற்றை அளவிடும் வினாக்கள் ;

(iii) பரீட்சார்த்தியின் கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றல், கிரகித்துக்கொள்ளும் திறன், பல வாக்கியங்களின் கருத்துக்களை ஒரு வாக்கியத்தால் எழுதுதல், எழுத்துப் பிழைகள், நிறுத்தக் குறியீடுகளின் பயன்பாட்டை பரீட்சித்தல், சரியான இலக்கணப் பயன்பாடு மற்றும் சொற்கள் தொடர்பான அறிவை அறவிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது ;

(iv) வழங்கியுள்ள தகவல்களின்படி இலகுவான கடிதமொன்றை வரைதல், குறிப்பொன்றை எழுதுதல், சுருக்கமான அறிக்கையொன்றை எழுதுதல், அழைப்பொன்றை தயாரித்தல், நிகழ்ச்சி நிரலொன்றை தயாரித்தல் தொடர்பான அறிவை அறவிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும். இரண்டு பகுதிகளும் தனி வினாத்தாளில் தரப்படும் :

பகுதி I - 20 பல்தேர்வு வினாக்கள் (20 புள்ளிகள், 15 நிமிடங்கள்) வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.

பகுதி II - கட்டுரை முறையிலான 03 வினாக்கள் (80 புள்ளிகள், 45 நிமிடங்கள்.) வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.

**குறிப்பு**.- (i) சேவையின் கடமைகளுக்காக பரீட்சார்த்தியொருவரின் தகவுத்திறன் மற்றும் ஆற்றல் ஆகியவற்றை பரீட்சிக்கும் வகையில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ii) ஒவ்வொரு எழுத்திலான விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகள் என்பவற்றிற்காக புள்ளிகள் கழிக்கப்படும்.

18. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, ஏப்பிறல் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012**

Limited Competitive Examination for Promotion of Minor Employees of the Public Service to Class III of the Public Management Assistants' Service – 2012

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1 | |
| 2 | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தை குறிப்பிடவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

பரீட்சைக்குத் தோற்றும்
மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
(இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

1.0 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.
உதா.: SILVA, A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-----.

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : -----.

2.3 பிரவேச அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

3.0 3.1 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு : □□□□ மாதம் : □□ திகதி : □□

3.3 தேசிய அடையாள அட்டை இல.:
□□□□□□□□□□

3.4 தொலைபேசி இலக்கம் :
□□□□□□□□□□

4.0 சேவை விபரங்கள் :-

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் நிறுவனத்தின் பெயர் : -----.

4.2 அந்த நிறுவனத்துக்கு சொந்தமான அமைச்சு அல்லது திணைக்களம் :----.

4.3 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.

4.4 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

4.5 தற்போதைய பதவி நிரந்தரமானதா ? தற்காலிகமானதா ? : ----.

4.6 தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :----.

4.7 உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், உறுதிப்படுத்தப்படுவதற்கு நீங்கள் தகைமையடைந்த திகதி :----.

4.8 தற்போதைய பதவியில் நீங்கள் உறுதிப்படுத்தப்பட்டது தொடர்பான கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

4.9 தற்போதைய ஆண்டு வேதனம் (திரட்டிய) :----.

4.10 தற்போதைய பதவி இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதா ? :----.

5.0 பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :----.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இவ்விடத்தில் ஒட்டிவிடவும்.)

இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென வெளிப்படுத்துகின்றேன். இத்துடன் தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால், அச்செம்மையின்மை நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்தல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்
(திணைக்களத் தலைவரின் முன்னிலையில் கையொப்பம் இடப்படல் வேண்டும்.)

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப் படுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

எனது அலுவலகத்தின் அலுவலரான திரு./ திருமதி/ செல்வி .................................... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ............................... இன்றைய திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(1) திரு./ திருமதி/ செல்வி ...................... இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும் ;
(2) அவர் நிரந்தரமான பதவியொன்றினை வகிக்கின்றாரெனவும் ;
(3) 2012.05.21 ஆந் திகதியன்று அவர் நிரந்தரமான பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரெனவும் ;
(4) நிரந்தரப் பதவியொன்றில் இவரை உறுதிப்படுத்தும் கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் ;
(5) அவர் 2012.05.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆகக்குறைந்தது 5 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையினை பூர்த்திசெய்துள்ளாரெனவும் ;
(6) அவர் குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 8.0 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அடங்கும் வேதனத்தைப் பெறுகின்றாரெனவும் அல்லது வேதன திட்டத்தில் உள்ளாரெனவும் ;
(7) 2012.05.21 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 5 ஆண்டு காலத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்ததெனவும் ;
(8) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும் ;
(9) ரூபா 400 பெறுமதியான ஒரு பற்றுச்சீட்டு விண்ணபத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
(10) அவரது விண்ணபத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளனவெனவும் இப்பரீட்சை சம்பந்தமான வர்த்தமானி அறிவிப்பில் காணப்படும் ஒழுங்குவிதிகளுக் கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும்

நான் சான்றுபடுத்துகிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு**.- (i) இச்சான்றிதழில், திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட முறையாக அதிகாரம்பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே கையொப்பமிடுதல் வேண்டும். சான்றிதழை அளிக்கும் உத்தியோகத்தர் சான்றிதழில் தரப்பட்டுள்ள விபரங்கள் எல்லாவகையிலும் சரியானவையெனத் திருப்தியடைதல் வேண்டும்.

(ii) தகைமைகள் பற்றிய எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்யாத எப்பரீட்சார்த்தியினதும் விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படலாகாது.

4-602

---

## அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

1. அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர்.

3. நியமிக்கப்படவுள்ள எண்ணிக்கையும் நியமனம் செயல்வலுப் பெறும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களில் ஏதாவது எண்ணிக்கையை அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

**4. சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்புகள் III, II மற்றும் I ஆகியவற்றுக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 13,990 - 10 × 145 - 11 × 760 - 6 × 240 - 14 × 320 - ரூபா 23,230 ஆகும். ரூபா 15,440 ஐ கடந்து செல்வதற்காக வகுப்பு II இற்கான தரம் உயர்வும் ரூபா 17,310 ஐ கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரம் உயர்வும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

**6. தகைமைகள்**.- அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) பின் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(1) ஒரு அமர்வில் கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி அத்துடன் கணிதம் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் ; அத்துடன்

(2) கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சையில் சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த எல்லா பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தலும்.
(பழைய பாட விதானத்தின் கீழ் ஒரு அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.)

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் 2012, மே மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமாகும்.

**7. மாவட்ட சனத்தொகை விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்தல்** :-

(அ) சேவைக்கான ஆட்சேர்ப்பு பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தின் சனத்தொகை எண்ணிக்கைக்கு விகிதசமமாகவும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 15/90 இற்கு ஏற்புடையதாகவும் அந்தந்த மாவட்டத்திற்கான வெற்றிட எண்ணிக்கையில் இருந்து குறிப்பிட்ட ஒரு தொகை ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்பப்பட வேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்காக அம்மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் மட்டுமே போட்டியிட தகைமையுடையவர்களாவார் :-

(i) ஏதேனுமொரு மாவட்டத்திற்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கை அம்மாவட்டத்திற்கு உள்வாங்கப்படாவிட்டால் குறித்த வெற்றிட எண்ணிக்கை மாகாணத்தினுள் அண்மித்திருக்கும் மாவட்டங்களுக்கு மீளப் பகிரப்படும்.

(ii) நியமனம் செய்வதற்குள்ள மொத்தப் பதவி எண்ணிக்கை சிறிய எண்ணிக்கையாக இருப்பின் அக்காரணத்தின் பேரில் மாவட்ட சனத்தொகை எண்ணிக்கையை அடிப்படையாக கொள்ள முடியாதவிடத்து திறமை ஒழுங்கின்படி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) பரீட்சையில் அவசியப்படும் ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றவர்களின் எண்ணிக்கையானது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையைவிட குறையுமிடத்து மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை அடிப்படையின் பேரில் தெரிவுகள் செய்யப்பட மாட்டாது.

(ஆ) ஒரு மாவட்டத்தை சேர்ந்தவராக இருப்பதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களுள் ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) பரீட்சார்த்தி அம் மாவட்டத்தில் பிறந்தவராக இருத்தல் வேண்டும். அல்லது

(ii) பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலங்களில் அவர் அம்மாவட்டத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்களாவது தொடர்ந்து நிரந்தரமாக குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால்

(iii) அவர் தொடர்ந்து 5 வருடங்கள் அம்மாவட்டத்தில் தனது இரண்டாம் நிலை பாடசாலை கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் மேற்போந்த (ஆ) (ii) இன்கீழ் தமக்குரிய மாவட்டத்தை நிரூபிப்பதற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருட கால வாக்காளர் இடாப்பு பட்டியல்கள் மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க கட்டுப்பாடுடையவர்கள் ஆதல் வேண்டும்.

**குறிப்பு**.- 1 எவரேனும் பரீட்சார்த்தியொருவரின் தந்தை அல்லது தாய் அரசாங்க சேவையின், மாகாண அரசாங்க சேவையின் அல்லது கூட்டுத்தாபனமொன்றின் இடமாற்றத்திற்குரிய சேவையொன்றில் ஈடுபட்டிருந்தால் அப்பரீட்சார்த்தி தனது, தந்தையின் அல்லது தாயின் பிறப்பிடத்தை தனக்குரிய மாவட்டமாக தெரிவு செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார். (பரீட்சார்த்தி அதற்காக தனது பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.)

2. பரீட்சார்த்தி எவரும் ஒரு மாவட்டத்திற்கு மேற்படும் மாவட்டங்களின் வெற்றிடங்களுக்கு போட்டியிட அனுமதிப்படமாட்டார். தாம் மிகவும் விரும்புகின்ற மாவட்டம் யாதென்பதை ஒரு முறை குறிப்பிட்ட பின் அதனை மாற்ற முடியாது.

8. நிலவும் வெற்றிட எண்ணிக்கையில் 3% வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில் கூடிய, புள்ளி மட்டத்தை அடைகின்ற 03% வீதமானவர்கள் மட்டும் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப் படுவர். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் குறைந்த பட்சம் 50 வீதமாவது ஆதல் வேண்டும். நியமனமொன்றுக்காக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் விசேட மருத்துவ பரிசோதனை குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன் தனது வலது குறைந்த நிலைமையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் விசேட மருத்துவ அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

9. **பரீட்சைத்திட்டம்**.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | | |
|---|---|---|
| (1) மொழித்திறன் | (1 1/2 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (2) உளச்சார்பு | (1 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |

**மொழித்திறன்**.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் கருத்துரைகள், புரிந்துணர்வு, எழுத்தமைவுகள் மற்றும் இலக்கணத்தை எளிய முறையில் உபயோகிப்பதில் உள்ள அறிவை சோதனையிடும் வினாக்களைக் கொண்டிருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**உளச்சார்பு**.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்களில் உள்ள ஆற்றல், தர்க்கரீதியான சக்தி, பொது விவேகம் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கிய 50 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(கடமைகளை நிறைவேற்றுவதற்காக பரீட்சார்த்திக்குள்ள தகைமை களையும் ஆற்றல்களையும் சோதிக்கும் வகையில் இவ்வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன.)

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பினும் நியமனத்திற் கான தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப் பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% ஆவது பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் 50% ஆவது பெற்றுக்கொள்ள வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பெறப்பட்ட புள்ளிகளின் ஒழுங்கு முறையைக் கண்டிப்பாக கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்ப பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி யுரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப் பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. **பரீட்சைக்கட்டணம்**.- பரீட்சைக்கட்டணம் ரூபா 500 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திற்கோ அல்லது மாவட்ட செயலகத்திற்கோ செலுத்தலாம். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி யொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21 × 29 cm) (சாதாரண ஹாப்ஷீட்) அளவிலான தாளை உபயோகித்து-

(அ) 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) 04 முதல் ஏனைய பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

உரிய மாதிரி படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்ப படிவத்தின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

**குறிப்பு**.- பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கப்படும் நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

போதுமானதாக இல்லாவிடின் இரண்டாவது விருப்பமாக குறிப்பிட்டுள்ள நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும். அந்த இரண்டாவது நகரத்தில் போதுமான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இல்லாது விடின் அண்மித்திருக்கும் நகரத்தின் பால் கவனம் செலுத்தப்படும்.

*12.1* வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டபின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர் கொண்டிருக்கவில்லையெனில் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

*12.2* விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2012" எனவும் நீங்கள் போட்டியிடும் மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும்.

*12.3* விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 2,40,360 ஆண்டுச் சம்பளத்தை அல்லது அதற்குக் கூடிய அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.

*12.4* முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2012, மே மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சை கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

*13.* **பரீட்சைக்கு தோற்றுதல்.**- விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்களிடத்திலுள்ள விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப்பிரதிகள், பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கோரிக்கை கடிதம் போன்றவற்றை உங்கள்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப் பயனுள்ளதாகும்.

*14.* பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

*15.* பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குதல் என்பது அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் என கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*16.* இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ்வர்த்தமான பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

பீ. பி. பி. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07,
2012, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### *அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012*

### Open Competitive Examination for Recruitment to Class III of Public Management Assistants Service - 2012

(கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் சரியான குறியீட்டையும்/ இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

■ வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் இலக்கத்தை குறிப்பிடவும். (பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்களுக்காக அட்டவணை II ஐ பார்க்கவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

■ வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் 7.0 பந்திக்கேற்ப நீர் தெரிவு செய்யும் மாவட்டம் (மாவட்ட இலக்கங்களுடனான அட்டவணை I ஐ பார்க்கவும். உரிய மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

■ நீர் பரீட்சைக்கு தோற்றுவது வர்த்தமானி அறிவித்தலில் 8.0 பந்தியின் பிரகாரம் வலது குறைந்த புனர்வாழ்வு சலுகை நிபந்தனைகளின் கீழா?
இப் பகுதியை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8.0 ஐ நன்கு வாசிக்கவும்.

ஆம் - 1
இல்லை - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத் துக்களுடன் பெயர் :----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) (உதா.: PERERA, A.B.C.)
   1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.
   1.4 தேசிய அடையாள அட்டை இல.:

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்):-----.
   2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : -----.
   2.3 பிரவேச அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

3. 3.1 பால் : (பெண் - 1/ஆண் - 0)
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
   3.2 பிறந்த திகதி :
   ஆண்டு : மாதம் : திகதி :
   3.3 2012.05.21 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :
   3.4 தொலைபேசி இலக்கம் :

4. 4.1 நீங்கள் மாவட்டத்தில் என்று முதல் வசிக்கின்றீர்?
   4.2 உதவி அரசாங்க அதிபர் பகுதி/பிரதேச செயலாளர் பகுதி
   4.3 கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

5. கல்வித் தகைமைகள் :

5.1 க. பொ. த. (சா/த) பரீட்சை பற்றிய விபரங்கள் :

I. பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
II. பரீட்சை சுட்டிலக்கம் :----.
III. பெறுபேறுகள் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க. பொ. த. (உ/த) பரீட்சை பற்றிய விபரங்கள் :

I. பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
II. பரீட்சை சுட்டிலக்கம் :----.
III. பெறுபேறுகள் :----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3 பரீட்சார்த்தி அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்தை பெற்றிருப்பின் :-

I. பல்கலைக்கழகத்தின் பெயர் :----.
II. பட்டம் :----.
III. பரீட்சை நடைபெற்ற ஆண்டு :----.

6. வேறு தகைமைகள் :----.

7. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப் பட்டுள்ளீர்களா ?

(உரிய கூட்டினுள் "✓" அடையாளமிடவும்.) ஆம் இல்லை
(ஆம் எனில் விபரங்களை குறிப்பிடவும்)

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :----.

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
III. செலுத்திய பணம் :----.

பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.

9. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும்,

சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்து கின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப் படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்து கின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................... ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**அட்டவணை I**

**மாவட்டப் பெயர் அட்டவணையும் இலக்கமும்**

| மாவட்டம் | இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

**அட்டவணை II**

**பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்**

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | மருதானை | 02 |
| | பொறளை | 03 |
| | கறுவாத்தோட்டம் | 04 |
| | பம்பலபிட்டி | 05 |
| | ஹெவ்லொக் டவுண் | 06 |
| | நுகேகொடை | 07 |
| | மொறட்டுவை | 08 |
| | பிலியந்தலை | 09 |
| | ஹோமாகம | 10 |
| | மஹரகம | 11 |
| | ஹங்வெல்ல | 12 |
| | அவிசாவளை | 13 |
| 2. கம்பஹ | நீர்கொழும்பு | 14 |
| | மினுவங்கொடை | 15 |
| | திவுலப்பிட்டிய | 16 |
| | வெயாங்கொடை | 17 |
| | கம்பஹ | 18 |
| | ஜா-எல | 19 |
| | வத்தளை | 20 |
| | களனி | 21 |
| | தொம்பே | 22 |
| 3. களுத்துறை | ஹொறணை | 23 |
| | பாணந்துறை | 24 |
| | களுத்துறை | 25 |
| | மதுகம | 26 |
| | அளுத்கம | 27 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 4. | மாத்தளை | மாத்தளை | 28 |
| | | கலேவெலை | 29 |
| | | நாவுல | 30 |
| | | லக்கலை-பல்லேகம | 31 |
| 5. | கண்டி | கண்டி | 32 |
| | | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | | தெல்தெனிய | 34 |
| | | வத்தேகம | 35 |
| | | நுகவெலை | 36 |
| | | கலகெதர | 37 |
| | | கம்பொளை | 38 |
| 6. | நுவரெலியா | ஹெதுனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வத்துமுல்ல | 41 |
| | | ஹட்டன் | 42 |
| | | கினிகத்தேன | 43 |
| 7. | காலி | அம்பலாங்கொடை | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகம | 46 |
| 8. | மாத்தறை | வெலிகம | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புறுபிட்டிய | 49 |
| | | ஹக்மன | 50 |
| | | தெய்யாந்தர | 51 |
| | | திக்வெல்லை | 52 |
| | | அக்குரஸ்ஸ | 53 |
| | | கொட்டபொல | 54 |
| 9. | அம்பாந்தோட்டை | பெலிஅத்த | 55 |
| | | வலஸ்முல்ல | 56 |
| | | வீரகெட்டிய | 57 |
| | | தங்கல்ல | 58 |
| | | அம்பலாங்கொடை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸமகாராம | 61 |
| 10. | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பளை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |
| 11. | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 13. | வவுனியா | வவுனியா | 69 |
| 14. | திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | | திருகோணமலை | 71 |
| | | மூதூர் | 72 |
| | | பதவி பராக்கிரமபுரம் | 73 |
| | | கிண்ணியா | 74 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 15. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | | ஏறாவூர் | 76 |
| | | காத்தான்குடி | 77 |
| 16. | அம்பாறை | அம்பாறை | 78 |
| | | சேரங்கட | 79 |
| | | கல்முனை | 80 |
| | | அக்கரைப்பற்று | 81 |
| | | சம்மாந்துறை | 82 |
| 17. | புத்தளம் | வென்னப்புவ | 83 |
| | | மாதம்பை | 84 |
| | | சிலாபம் | 85 |
| | | புத்தளம் | 86 |
| 18. | குருநாகல் | குளியாப்பிட்டிய | 87 |
| | | பிங்கிரிய | 88 |
| | | நாரம்மல | 89 |
| | | பொல்கஹவெல | 90 |
| | | குருநாகல் | 91 |
| | | இப்பாகமுவ | 92 |
| | | தொடங்கஸ்லந்த | 93 |
| | | மொறதிக | 94 |
| | | நிக்கவெரட்டிய | 95 |
| | | மாகோ | 96 |
| 19. | அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | | கெக்கிராவ | 98 |
| | | அநுராதபுரம் | 99 |
| | | கலென்பிந்துனுவெவ | 100 |
| | | கஹட்டகஸ்திகிலிய | 101 |
| 20. | பொலன்னறுவை | பொலன்னறுவை | 102 |
| | | ஹிங்குரங்கொட | 103 |
| 21. | பதுளை | பண்டாரவளை | 104 |
| | | வெலிமடை | 105 |
| | | பதுளை | 106 |
| | | பசறை | 107 |
| | | மஹியங்கனை | 108 |
| | | கிராந்துறு கோட்டை | 109 |
| | | ஹசலக்க | 110 |
| 22. | மொனறாகலை | பிபில | 111 |
| | | மொனறாகலை | 112 |
| | | வெல்லவாய | 113 |
| 23. | கேகாலை | கேகாலை | 114 |
| | | றம்புக்கணை | 115 |
| | | மாவனல்லை | 116 |
| | | ருவன்வெல்ல | 117 |
| 24. | இரத்தினபுரி | எஹெலியகொடை | 118 |
| | | இரத்தினபுரி | 119 |
| | | பெல்மடுல்ல | 120 |
| | | பலாங்கொடை | 121 |
| | | கலவானை | 122 |
| | | எம்பிலிப்பிட்டி | 123 |
| 25. | கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | | பளை | 125 |

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2012

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் "சேவையின்" எனும் பதம் இலங்கை கணக்காளர் சேவையைக் (இ.க.சே.) குறிக்கும்.

1. **பரீட்சைத் திகதி**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2012 ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பிலும் மற்றும் யாழ்ப்பாணத்திலும் இப்பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

2. **நியமிப்போரின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி**.- இது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலக்கம் 1670/33 மற்றும் 2010 செப்தெம்பர் மாதம் 10ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அதில் செய்யப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் செய்யக் கூடிய திருத்தங்களுக்கும் இணங்கும் வகையில் தெரிவு செய்யப்படுகின்ற அபேட்சகர் ஒருவர் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

3.1 இப்பரீட்சை மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 63 ஆகும்.

3.2 தெரிவு செய்யப்படுவோர் நியமனத் தினத்திலிருந்து ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுதல் வேண்டும். அவ்வாறு பணியாற்றத் தவறும் பட்சத்தில் அவர்களது சேவை முடிவுறுத்தப்படும்.

3.3 தம்மிடம் ஒப்படைக்கப்படும் பதவிக்குரிய கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்க தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்படும் பதவியில் நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையினைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது நழுவும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு.

3.4 விசேட பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கைக் கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு மேலதிகமாக 05 வருட காலப் பகுதியினுள் சிங்கள மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். (பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம்)

4. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் எஸ்.எல் 1-2006 சம்பளத் தொகுதியின் பிரகாரம்,

மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம்.- SL1 - 2006 - ரூ.22,935 - 10x645 - 8x790 - 17x1050 - ரூ.53,555/=

5. **தகைமைகள்** :

5.1 திறந்த போட்டிப் பரீட்சை :

(அ) கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலே வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின்/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாதாரர் ஒருவராகவிருத்தல்;

அல்லது

(iii) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் அல்லது வேறொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த இறுதி அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(iv) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டைச் சேர்ந்த பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படும் செலவினம் மற்றும் முகாமைத்துவப் பரீட்சையின் I மற்றும் II ஆம் பகுதிகள் அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது அதிலும் கூடிய உயர்நிலைப் பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தில் I ஆவது தொழில்சார் மட்டத்தில் அல்லது அதிலும் கூடிய உயர் மட்டத்திலான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(vi) ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் I ஆவது II ஆவது பகுதிக்குரிய பரீட்சை அல்லது அதிலும் கூடிய பரீட்சை ஒன்றிலே சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(vii) ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்களின் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை

மற்றும்

(viii) வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுவதற்காக தமிழ் மொழியை நன்கு பேசக் கூடிய தேர்ச்சியுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியை பிரதான பாடமொன்றாக எடுத்து அதில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) உடல்சார் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள்.- இதற்குத் தோற்றும் விண்ணப்பதாரர் ஒருவர்.

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்

(iii) திறந்த போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் எந்தவொரு நபருக்கும் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

(iv) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(v) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக கருதுவதற்கு விண்ணப்பதாரர், 5(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2012.04.20 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும், தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) வயது.- 2012.04.11 திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) 22 வயதிற்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக பிரதேசச் செயலகத்திற்கு அல்லது மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்துதல் வேண்டும். பிரதேசச் செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய பெட்டியில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை விண்ணப்பதாரர்கள் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்பட மாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பத்தை இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ-4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 04 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழியிலேயே நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தினை தயாரிக்கும் போது அதன் தலைப்புக்களை தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியில் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிடுதல் கட்டாயமானதாகும். (12 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2012.05.18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரிற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை 2012" என்று தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பியவுடன் பத்திரிகைகளில் அது பற்றி விளம்பரம் செய்யப்படும். பரீட்சை தினத்திற்கு ஏழு நாட்களுக்காவது முன்னர் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் பின்வரும் விபரங்களுடன் உடனடியாக பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். (தந்திகளுக்கு "பரீட்சைகள்" பெலவத்தை)

(i) பரீட்சையின் பெயர் :----.
(ii) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :----.
(iii) முகவரி :----.
(iv) விண்ணப்பப் படிவத்தை தபால் செய்த திகதி, பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம் :----.

(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது நிலவிய விண்ணப்பதாரர்களின் பதவிகள் மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் தேவைப்படுவதுடன், விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் அவைகளில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் உரிய முறையில் கையொப்பத்தை உறுதி செய்து தமது அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டை முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளன்று அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்றினை அனுப்பியுள்ளமை, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்று பொருள்கொள்ளக் கூடாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு மற்றும் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

9. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப் படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் செல்லுபடியான கடவுச் சீட்டு

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பதாரர் ஒருவர் தகைமை பெறாதவர் என்று கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் அல்லது அதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள யாதேனுமொரு விடயம், அவர் போலியானதென தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்படின், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

11. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறை**.- பரீட்சை மொழிமூலம் : இப்பரீட்சையானது தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

13. **பரீட்சித்தல் முறை**.- (அ) பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சை ஒன்று : இவ்வினாத்தாள்கள் அனைத்தும் கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமானதாகும் :-

(i) நிதி கணக்கியல் - வினாத்தாள் I - (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(ii) நிதி கணக்கியல் - வினாத்தாள் II- (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(iii) செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் - (காலம் : 03 மணித்தியாலம்)- 100 புள்ளிகள்
(iv) அரச நிதி முகாமைத்துவம் - (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(v) கணக்காய்வு மற்றும் விசாரணை - (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(vi) பொது விவேகம் மற்றும் கிரகித்தல் - (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பாடத்திட்டம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) நேர்முகப் பரீட்சை.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40% வீதப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய அபேட்சகர்களின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

13.1 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

13.2 நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யும் முறை.- எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள திறமையின் ஒழுங்கு முறைப்படி மற்றும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒன்றுக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் சம அளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் காணப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பீ.ஏ. அபேசேகர
திறைசேரியின் பிரதிச் செயலாளர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2012, ஏப்ரல் மாதம் 20 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

SPECIAL OPEN COMPETITIVE EXAMINATION FOR FILLING GRADE III VACANCIES OF THE SRI LANKA ACCOUNTANTS' SERVICE IN NORTHERN AND EASTERN PROVINCES - 2012

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம் :<br>(அலுவலக பயன்பாட்டிற்காக) | |
| பரீட்சைக்குத் தோற்றும் நகரம் | நகர இலக்கம் |
| | |
| விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் என்பவற்றினைக் குறிப்பிடவும். (கொழும்பு - 1, யாழ்ப்பாணம் - 2)<br>* நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | ☐ |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :<br>தமிழ் - 3<br>* உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும் | ☐ |

1. பெயர்:
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : Mr./Mrs./Miss ................................
   (உ+ம்) Mr./Mrs./Miss. SILVA, A.B

   1.2 முழுப் பெயர் (தமிழில்) : ....................................

   1.3 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ................. ..............................................

2. நிரந்தர முகவரி (தமிழில்) : .......................................

   2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..................... ...........................................

   2.2 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................

3.
   3.1 பால்: பெண் - 1, ஆண் - 0 ☐
   (உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும் )

   3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :
   விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 ☐
   (உரிய இலக்கத்தை பெட்டியினுள் எழுதவும்)

   3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

   | | | | | | | | | | |
   |---|---|---|---|---|---|---|---|---|---|
   | | | | | | | | | | |

   3.4 பிறந்த திகதி :

   ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   3.5 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. அறிவித்தலின் 5 ஆம் பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுக்கொண்ட தகைமைகள் :......................................................

5. இலங்கைக் கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இதற்கு முன்னர் நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டுகள் :

   1 ..............................
   2 ..............................
   3 ..............................

6. பணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழறாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும்

   | |
   |---|
   | (பற்றுச் சீட்டை இங்கு ஒட்டவும்)<br>பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும் |

   (i) இலக்கம் :......................................................
   (ii) திகதி :........................................................
   (iii) பணம் செலுத்திய இடம் :.....................................
   (iv) செலுத்திய தொகை : ரூபா ....................................

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

   7.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் ............................ மற்றும் ........................ ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும், குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பரீட்சை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும், இப்பரீட்சைக்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவரென அடையாளம் காணப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் வேளையில் அல்லது அதன் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுவதாகவும், பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு மற்றும் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் உடன்படுவதாகவும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ........................ (முழுப்பெயர்) எனும் பெயருடைய விண்ணப்பதாரரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், .................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் இங்கு கைச்சாத்திட்ட தாகவும், உறுதிப்படுத்துகிறேன்.

.................................................,
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்).

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :.............................
பதவி :..............................................................
முகவரி : (இறப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
திகதி :..............................................................

**குறிப்பு** : உறுதிப்படுத்துபவர் சமாதான நீதவான் ஒருவராக, சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவராக, சட்டத்தரணி ஒருவராக, நொத்தாரிசு ஒருவராக அல்லது வருடாந்தம் ரூ. 2,40,360/= இற்குக் குறையாத திரண்ட சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

பின்னிணைப்பு - 1

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பற்றிய விபரம் :**

பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

பகுதி 'அ'

| இல. | விடயங்கள் | காலம் | சித்திப் புள்ளி | ஆகக் கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நிதிக் கணக்கியல் I | காலம் 03 | 40 | 100 |
| 02 | நிதிக் கணக்கியல் II | காலம் 03 | 40 | 100 |
| 03 | செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் | காலம் 03 | 40 | 100 |
| 04 | அரச நிதி முகாமைத்துவம் | காலம் 03 | 40 | 100 |
| 05 | கணக்காய்வு மற்றும் விசாரணை | காலம் 03 | 40 | 100 |
| 06 | பொது விவேகம் மற்றும் கிரகித்தல் | காலம் 03 | 40 | 100 |

**பாடத் திட்டம்**.- பாட இலக்கம் 01 மற்றும் 02 நிதிக் கணக்கியல் I மற்றும் II :

நிதி கணக்கீட்டின் தன்மை மற்றும் கணக்குகளைப் பயன்படுத்துவோரும் அவர்களுக்குத் தேவைப்படும் தகவல்களும்

கணக்கீட்டு முறைமை

கணக்கீட்டுச் சமன்பாடுகள், இரட்டைக் கணக்குப் பதிவு முறையும் கணக்கீட்டு முறைமைகளும், ஆரம்பப் பதிவேடுகளும் பேரேடுகளும், மீதியினைப் பரீட்சித்தல், திரண்ட முற்பணக் கொடுப்பனவுகள், சீராக்கங்கள், மூலதன செலவினம், வருமானச் செலவு, பெறுமானத் தேய்வு, தொங்கல் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுகள், பூரணப்படுத்தப்படாத அறிக்கைகள்.

இறுதிக் கணக்குகள்.- உற்பத்திக் கணக்கு, வியாபார இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை, நிதிப் பாய்ச்சல் கூற்றும் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு.

பங்குடமை கணக்கீடு.- பங்குடமை உடன்படிக்கைகள், பங்குடமையில் கணக்கு பதிவுகள், நிலையான மூலதனக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், கடன் கணக்குகள், மீளப் பெறல் கணக்குகள், பங்குடமை இறுதிக் கணக்கினைத் தயாரித்தல், பங்குடமை இணைப்பு மாற்றங்கள், நன்மதிப்பினைப் பேணுதலும் பங்காளர்களை அனுமதித்தலும், பிற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான நடவடிக்கைகள், பங்குடமையைக் கலைத்தல், கூட்டு முயற்சிகள்.

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் கணக்கீடு.- பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் தன்மை, உத்தியோக நிரல்படுத்தப் பட்ட கம்பனிகள் மற்றும் பங்குச் சந்தை, பங்குடமை மற்றும் கடன் மூலதனம், பகிரத்தக்க இலாபம், உள்ளக மற்றும் வெளி பயன்பாட்டிற்கான இறுதிக் கணக்குகள், கணக்குக் கூற்றுக்களுக்கான பொருள்கோடல், கணக்கீட்டு விகிதங்கள்.

விசேட கொடுக்கல் வாங்கல்களுக்கான கணக்கீடு.- கம்பனிகள், சங்கங்கள், கையிருப்பு, வாடகைக் கொள்வனவும் கடன் விற்பனைகளும், குத்தகைக்கு விடல், முதலீடுகள், செலாவணி உண்டியல்கள், நீண்டகால ஒப்பந்தங்கள், வேத்துரிமைகள், வெற்றுக் கணக்குகள், வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்.

கணக்கீட்டு நடவடிக்கைகளுக்கு கணனிகளைப் பயன்படுத்தல்.- கணனிகளின் வகைகள்/வன்பொருள் மற்றும் மென்பொருள், கணணி விநியோக மென்பொருள், இலத்திரனியல் கணக்குத் தாள்கள், கணனிமயப்படுத்திய கணக்கீடு.

**விடய இல.03**- செலவினம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல்.- செலவினக் கணக்கீடு, நிதிக் கணக்கீடு, முகாமைத்துவக் கணக்கீடு, ஆகு செலவுக் கணக்கீட்டின் நோக்கம், கணக்கியலை முகாமைத்துவத் துணைக் கருவியாகப் பயன்படுத்தல்.

பொருட் செலவு.- கொள்வனவு நடைமுறைகள், களஞ்சிய முறைகள், பொருள் வழங்கலை மதிப்பீட்டு செய்யும் முறைகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவும் மிகையூதியக் கொடுப்பனவும்.

ஊழியச் செலவு.- நேரம் பதிதல், நேரம் ஒதுக்குதல், சம்பள கொடுப்பனவு முறைகள், மிகையூதியக் கொடுப்பனவுகளும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும், சம்பளங்கள் மற்றும் கூலிகள் என்பவற்றினை புத்தகப் பதிவு வைத்தல்.

பொது விடயங்களுக்கான செலவுகள்.- வகைப்படுத்திய ஒதுக்கங்கள் மற்றும் விநியோகம், அகற்றல் முறைகள், பொது விடய நிருவாகம், வியாபாரம் மற்றும் விநியோகம் பற்றிய பொது விடயச் செலவுகள்.

திரண்ட மற்றும் திரளாத கணக்குகள்.- செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்குகள், செலவு மற்றும் நிதிக் கணக்குகளின் கணக்கிணக்கம், முழுமைக் கணக்குகள்.

*செலவீட்டு முறைகள்.*- ஒப்பந்தச் செலவீடு, தொழில் செலவீடு, திணைக்கள செலவீடு, பொருள் செலவீடு, செய்முறைச் செலவீடு, அலகு செலவீடு, சேவைகள் செலவீடு, வெவ்வேறு செலவீட்டு முறைமைகளின் கீழ் தேறப்பெறாத இலாபம்.

*எல்லை நிலைச் செலவீடு.*- பங்களிப்புக்கள்/விற்பனை, சமவரவு குறிப்புக்கள், எல்லை நிலைச் செலவீட்டின் பிரயோகங்கள், எல்லை நிலைச் செலவீட்டுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள்,

*நியம செலவீடு.*- நியம செலவுகள், உண்மையான செலவுகள், அடிப்படை வேறுபாடுகள், கணக்கீட்டு நடைமுறைகள்

*வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு.*- தொழிற்பாட்டு வரவு செலவுத் திட்டம், பிரதான வரவு செலவுத் திட்டம், நெகிழ்வுத் தன்மைமிக்க வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, தொடர் வரவு செலவுத் திட்டவாக்கம் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு.

***விடய இல.04 – அரச நிதி முகாமைத்துவம்.- அரச நிதி தொடர்பான சட்டத் தன்மை***

*திரண்ட நிதியம், விசேட சட்டச் செலவினம், நானாவித நிதியம், அரச படுகடன், வெளிநாட்டு உதவி, அரசிறைச் செயல்முறைகள்.*

*பொறுப்புக்கள்.*- பாராளுமன்றத்தின், நிதி அமைச்சரின், திறைசேரியின் கணக்காளர் நாயகத்தின், கணக்காய்வாளர் நாயகத்தின், அரச கணக்குகள் குழுவின், அரச தொழில் முயற்சிகள் குழுவின், பிரதான கணக்கீட்டு அலுவலரின், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் நாணயச் சபையின் பொறுப்புக்கள்.

*வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம்.*- வரவு செலவுத் திட்ட முறைமையும் நடைமுறைகளும், வருமான செலவின மதிப்பீடுகளும்

*வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துதல்.*- வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்குக் கட்டமைப்பு, வருமான சேகரிப்பு ஒழுங்கு விதிகள், கொடுப்பனவு செலுத்துவதற்கான கட்டு நிதி, நிதி தொழிற்பாடுகளின் கண்காணிப்பு, பணிகளை கையளித்தல், ஒம்புட்ஸ்மன் நடைமுறைகள், வீரமொங் ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு, கொள்வனவு நடைமுறைகள்.

*அரசாங்க கணக்கீட்டு முறைமையும் நடைமுறைகளும்.*- அரசாங்க சொத்துக்கள் பற்றிய பொறுப்புக்கள், வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் பற்றிய கணக்கீடு, செலவினம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான கணக்கீடு, வெளிநாட்டு உதவிக்கான கணக்கீடு, நட்டத்தை கைவிடல் மற்றும் பதிவழித்தல் பற்றிய கணக்கீடு.

*மீளாய்வு.*- உடனடி அறிக்கைகள், மாதாந்த கணக்குச் சுருக்கங்கள், நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை மீளாய்வு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, நாட்டின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, அரச கணக்குகள் குழுவின் சாராம்சம், அரச தொழில் முயற்சிகள் குழுவின் அறிக்கை.

***விடய இல 05 – கணக்காய்வும் விசாரணைகளும்.- கணக்காய்வின் தன்மை மற்றும் குறிக்கோள் - கணக்காய்வின் பொறுப்புக்கள்***

*உள்ளக கணக்காய்வு, புறக்கணக்காய்வு, சட்டவாக்கம்* : இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுடன் தொடர்புடைய சட்டமல்லாத – 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கணக்காய்வு நியமங்கள், கணக்காய்வு அபிப்பிராயங்கள், கணக்காய்வின் எண்ணக்கருக்கள் கணக்காய்வாளரது சுதந்திரமும் பிற ஆள்சார் பண்புகளும், உண்மை மற்றும் நியாயத் தன்மை, பௌதீகத் தன்மை, கணக்காய்வுத் தன்மைகள், கணக்காய்வாளரின் பொறுப்புகள், கணக்காய்வுக்கு உட்பட்டவரின் பொறுப்புகள்.

*பாடத் திட்டமும் எல்லைகளும்.*- பாடத் திட்டத்தை நிர்ணயித்தல், கருதுகோள் மற்றும் வரையறைகள்

*கணக்காய்வுத் தரங்கள் மற்றும் வழிகாட்டல்களின் பொறுப்புக்கள்.*- கடமையாற்றுதல் கடிதங்களின், முகாமைத்துவ கடிதங்களின் மற்றும் பிரதிநிதித்துவ கடிதங்களின் பொறுப்புக்கள், அடிப்படை கணக்காய்வு முறைமைகள் மற்றும் மீளாய்விற்கான ஒழுங்கு விதிகள், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீடுகள்

*அளவுத்திட்ட வரைபடங்கள், கேள்விக் கொத்துக்கள்.*- கணக்காய்வு திட்டமிடலும் கட்டுப்பாடும்

*கணக்காய்வு திட்டமிடலும், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்கு பொறுப்பு வழங்குதல், கணக்காய்வுக் கட்டுப்பாடு, உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பதிவு செய்தல், உள்ளக வேலைகளை பதிவு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடு மதிப்பீட்டிற்கான வினாக் கொத்தக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.*

*நிதிக் கணக்காய்வுக்கான பெறுமதிகள், எண்ணக்கருக்கள் மற்றும் பண்புகள்*

*அது அரசாங்கத் துறையுடன் தொடர்புபடும் விதம், பகுப்பாய்வு ரீதியான கணக்காய்வு*

*கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் கணக்காய்வு.*– வரையறுக்கப்பட்ட கம்பனிகள்.- நியதிச்சட்ட ஆவணங்கள், பணிப்பாளர்களின் தத்துவங்களும் கடமைகளும், பங்கிடக் கூடிய இலாபங்கள், கணக்காய்வாளர்களின் நியமனம், ஊதியமும் நீக்கமும், புதிய கணக்காய்வாளர்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், கணக்காய்வாளர் களின் தத்துவங்களும் கடமைகளும்.

*பரிசோதனைகளின் தன்மையும் அளவும்.*- ஒப்பீட்டுப் பரீட்சை, சுயாதீனமான பரிசோதனை, மாதிரி நுட்பங்கள், ஐந்தொகை சரிபார்த்தல், வருமான செலவின கணக்குகளை சரிபார்த்தல்.

*கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்காளர்களின் தொழில்சார் பொறுப்புக்கள்.*- தொழில்சார் நடத்தையும் ஒழுக்கவியலும், சட்ட உரிமைகளும் பொறுப்புகளும், கணக்காளர் மற்றும் கணக் காய்வாளர்களின் சட்ட ரீதியான பொறுப்பும் நிகழ்வுகள் தொடர்பான சட்டரீதியான விடய அறிவுடன் தொடர்புடைய சட்டங்களும்.

*விசாரணைகள்.*- விசாரணையுடன் தொடர்புடைய பாடத் திட்டத்தை திட்டமிடல், பயன்படுத்த வேண்டிய நுட்பங்களும் நடைமுறைகளும், புலனாய்வு நடத்துவதற்கான எண்ணத்தின் உதாரணங்கள், சாத்தியவள ஆய்வுகள், கொள்வனவு, விற்பனை, கடன் வழங்கல், விலையிடல் போன்ற வியாபார நிறுவனங்களின் மதிப்பீடுகள். தகவல் தொகுப்பு அறிக்கைகளுக்கான கணக்காளர்கள், கணக்காய்வாளர்களின் அறிக்கை, அறிக்கையிடல் செயற்பாடுகள், மோசடி புலனாய்வுகள், கருத்திட்ட மதிப்பீடுகள்.

*அறிக்கையிடல் தொழிற்பாடுகள்.*- உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பலவீனங்கள் பற்றி முகாமைக்கு அறிவித்தல், அரச மற்றும் கூட்டுத்தாபன கணக்காய்விற்கு எழுத்து மூலம் விசேட அறிக்கையிடல் பணிகள், தகவற்தொகுப்பு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள்.

***விடய இல.- 06 பொது விவேகமும் கிரகித்தலும்***

***பகுதி 'அ' - கிரகித்தல்***

கிரகித்தல் வினாத்தாளில் தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுவர். இன்னுமொரு உரைப்பகுதியும் தரப்படும், அதன் சாராம்சத்தை உரைப்பகுதியிலுள்ள சொற்களில் மூன்றிலொரு பகுதிக்கு சுருக்குமாறு கேட்கப்படும்.

***பகுதி 'ஆ' - பொது விவேகம்***

*பொது விவேகம்.*- பதத்தின் மூலம், புள்ளி விபரம் மூலம் மற்றும் உருவ வடிவில் முன்வைக்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக விண்ணப்பதாரரின் தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் என்பவற்றினை பரீட்சிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் கிரகித்தல் தன்மை மற்றும் பொது விவேகம் என்பன இதன் மூலம் அளவிடப்படும். (பல்தேர்வு மற்றும் குறுகிய பதில் அடிப்படையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.)

**குறிப்பு.**- (I) மேற்படி (ஆ) மற்றும் (இ) இலுள்ள "தகைமை பெற்ற பரீட்சை" என்ற சொல்லின் மூலம் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றினைக் குறிக்கும்.

(II) பரீட்சார்த்திகள் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலளித்தல் வேண்டும்.

(III) தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4-605

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.